பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 01 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வெளிநாடுவாழ் இந்தியர்களின் 18-வது மாநாட்டை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புவனேஸ்வரில் முறைப்படி தொடங்கி வைக்கிறார்.
2. அடல் புத்தாக்க இயக்கத்தின் இரண்டாவது கட்டம் தொழில்முனைவோருக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
3. இந்தியா - இங்கிலாந்து இடையேயான உறவு மேலும் வலுப்பெறும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.
4. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக காரைக்கால் மீனவர்கள் பத்து பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.
5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தமிழ்நாடு அணி, குணஷிகா அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

வெளிநாடுவாழ் இந்தியர்களின் 18-வது மாநாட்டை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புவனேஸ்வரில் முறைப்படி தொடங்கி வைக்கிறார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று மாலை புவனேஸ்வர் சென்றடைந்த பிரதமரை பிஜு பட்நாயக் சர்வதேச விமான நிலையத்தில் அம்மாநில ஆளுநர் திரு அரிபாபு, முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் ஆகியோர் வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து ஆளுநர் மாளிகை வரை இருமருங்கிலும் பொதுமக்கள் திரண்டு நின்று பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ஒடிஸா மாநிலத்தின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெற்றன.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை மத்திய அரசும், ஒடிஸா மாநில அரசும் இணைந்து நடத்துகின்றன.

இந்த மாநாட்டில் 50-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வெளிநாடுவாழ் இந்திய பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இலக்கை எட்டுவதற்கு வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்களிப்பை அதிகரிப்பது குறித்த கருத்தரங்கிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியாக வெளிநாடுவாழ் இந்திய இளைஞர்கள் மாநாடு நடைபெற்றது.

இதில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நாளை நடைபெறும் நிறைவு நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று பல்வேறு துறைகளில் சாதனை படைத்த வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு விருதுகளை வழங்குகிறார்.

[]<<<>>>[]

அடல் புத்தாக்க இயக்கத்தின் இரண்டாவது கட்டம் தொழில்முனைவோருக்கு ஊக்கம் அளிப்பதோடு, அரசு மற்றும் தனியார் ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிதி ஆயோக்கின் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் இத்திட்டம் தொடர்பாக உரையாற்றிய அவர், ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை நிலை நிறுத்துவதற்கும், அவர்களுக்கான தொழில் தொடர்புகளை ஒருங்கிணைப்பதற்கும் முக்கிய கருவியாக இத்திட்டம் அமைந்துள்ளது என்று கூறினார்.

நாட்டின் பல பகுதிகளில் சமமான வாய்ப்புக்களை ஏற்படுத்தி,, வேலைவாய்ப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் இந்த திட்டம் உறுதுணையாக அமையும் என்றும் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்திய விண்வெளி ஆய்வு மையம் விண்வெளியில் இரண்டு செயற்கைக் கோள்களை இணைக்கும் பரிசோதனை திட்டத்தை மீண்டும் ஒத்தி வைத்துள்ளது.

புவி சுற்றுப்பாதையில் தாழ்வான தூரத்தில் ஸ்பாடெக்ஸ் திட்டத்தின் கீழ் இந்த செயற்கைக் கோள்கள் இணைக்கப்படவிருந்தன.

எதிர்காலத்தில் விண்வெளியில் இந்தியாவுக்கென்று தனியாக விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்குவதற்கு இத்தகைய பரிசோதனைகள் உதவிடும் என்று இஸ்ரோ கூறியுள்ளது.

இரண்டு செயற்கைக் கோள்களுக்கு இடையே கூடுதல் இடைவெளிய இருந்த காரணத்தால் இத்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இஸ்ரோ சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளது.

இந்த இடைவெளியை 225 மீட்டராகக் குறைக்க இஸ்ரோ மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக இரண்டு செயற்கைக் கோள்களை நேற்று முன்தினம் இணைக்க இஸ்ரோ திட்டமிட்டிருந்தது.,

**[]<<<>>>[]**

இந்தியா – இங்கிலாந்து இடையேயான உறவு மேலும் வலுப்பெறும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் சென்றுள்ள அவர், அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் திரு **Lindsay hoyle** -யை சந்தித்து பேசினார்.

இரு நாடுகளும் ஜனநாயகத்தையும், ஜனநாயக மாண்புகளையும் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி வருவதாக அவர் தெரிவீத்தார்.

நாடாளுமன்ற செயல்பாடுகளையும் இரு நாடுகளும் சிறப்பாக மேற்கொள்வதாகவும் அவர் கூறினார்.

பிரிட்டன் இந்தியாவின் நீண்டகால நட்பு நாடு என்றும், இரு நாடுகளுக்கும் இடையேயான உத்திசார் ஒத்துழைப்பு வரும் காலத்தில் மேலும் வலுவடையும் என்றும் திரு ஓம் பிர்லா தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் செயற்கை நுண்ணறிவு உட்பட பல்வேறு புதுமையான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதை பிரிட்டனர் சபாநாயகர் பாராட்டினார்.

**[]<<<>>>[]**

திருப்பதியில் நேற்று நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி ஆறு பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

வைகுண்ட ஏகாதசியையொட்டி கீழ்திருப்பதியில் தரிசன டோக்கன் விநியோகத்தின்போது இந்த நெரிசல் ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வைகுண்ட ஏகாதசி தரிசனத்திற்காக கீழ் திருப்பதில் மூன்று மையங்களில் 94 கவுண்டர்கள் அமைத்து டோக்கன்களை திருப்பதி திருமலை தேவஸ்தானம் விநியோகித்து வருகிறது.

ராமாநாயுடு பள்ளி அருகே அமைக்கப்பட்டிருந்த ஒரு கவுண்டரில் இந்த சம்பவம் நடைபெற்றது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய தாம் பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆந்திர மாநில அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்றும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

ஆந்திர முலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடுவும் இந்த சம்பவம் குறித்து தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

சம்பவம் நடந்த இடத்தை திரு சந்திரபாபு நாயுடு இன்று நேரில் ஆய்வு செய்ய உள்ளதாக திருமதி திருப்மலை தேவஸ்தான செயல் அதிகாரி திரு பி ஆர் நாயுடு தெரிவித்துள்ளார்.

அங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் அவர் ஆய்வு நடத்த உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள மக்களவை எதிர்க்கடசித் தலைவர் திரு ராகுல்காந்தி, காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டுமென்று தமது விருப்பத்தையும் சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்த துயரமான நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்திடுமாறு காங்கிரஸ் கட்சியினரை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தவர்கள் பற்றிய விவரங்களை அறிய திருப்பதி திருமலை தேவஸ்தானம் சார்பில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

உதவி கோருவோர் 0 8 7 7 - 2 2 3 6 0 0 7 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக காரைக்கால் மீனவர்கள் பத்து பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நெடுந்தீவு அருகே இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டதாக மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

ஜம்மு-ஸ்ரீநகர் இடையே அமைக்கப்பட்டுள்ள ரயில் பாதையில் கத்ரா முதல் ஸ்ரீநகர் வரை வந்தே பாரத் விரைவு ரயில் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எட்டு பெட்டிகள் கொண்ட இந்த ரயில் மூன்று மணி பத்து நிமிடத்தில் இந்த தூரத்தை கடக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு கோட்டத்தில் பனிஹால் - கத்ரா இடையே புதிதாக அமைக்கப்பட்டுள்ள ரயில் பாதையில் ரயிலை மணிக்கு 111 கிலோ மீட்டர் வேகத்தில் இயக்கி சோதனை நடத்தப்படும் என்றும், இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த பாதையில் ரயில்கள் இயக்கப்படும் என்றும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜம்மு ரயில் நிலையம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப் 'பட்டுள்ளதகாவும் அமைச்சகம் கூறியுள்ளது.

ஜம்மு-ஸ்ரீநகர் இடையே இயக்கப்பட உள்ள வந்தே பாரத் விரைவு ரயில் கடுமையான குளிரையும் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ரயில் பாதையில் பயணிகள் ரயில் செல்வதற்கு முன்பு பனிக்கட்டிகளை அகற்றும் ரயில் செல்லும் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

[]<<<>>>[]

இந்தியா – ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவுகள் மற்றும் ஆசியாவின் தற்போதைய நிலைமை குறித்து இந்திய வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி துபாயில் நேற்று ஆப்கான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மவுலாவி அமிர்கானை சந்தித்து பேசினார்.

ஆப்கானுடன் இந்தியாவுக்கு வரலாற்று சிறப்புமிக்க நட்புறவு நீடிப்பதாகவும், மக்களுக்கு இடையே வலுவான உறவுகள் நீடிப்பதாகவும் இந்த சந்திப்புக்குப் பின்னர் வெளியிடப்பட்ட வெளியுறவுத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு இந்தியா எப்போதும் உதவ தயாராக இருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தியா உதவியுடன் ஆப்கானிஸ்தானில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதாபிமான உதவி திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகவும் இருவரும் விவாதித்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் காலத்திலும் ஆப்கானிஸ்தானில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள இந்தியா தயாராக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்பானிஸ்தான் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தியாவிலிருந்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் கோதுமை, 300 டன் மருந்து பொருட்கள், 40 ஆயிரம் லிட்டர் பூச்சிக் கொல்லி மருந்துகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அந்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தமிழ்நாடு 6-5 என்ற கோல் கணக்கில் குணஷிகா அணியை வென்றது.

ரூர்கேலாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஹைதராபாத் அணி 3-0 என்ற கோல் கணக்கில் உத்திரபிரதேச அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் வேதாந்தா கலிங்கா அணி – குணஷிகா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று கோவா — ஹைதராபாத் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.